# ஒபரேஷன் யாழ்தேவி'யில் 10,000 படையினர்

(கொழும்பு)

வடக்கில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் ஒபரேஷன் யாழ்தேவி' நடவடிக்கையில் பத்தாயிரம் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர். கொழும்பில் இராணுவ அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளையில் தற்போதைய நடவடிக்கையில் யுத்த

(3-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாதி 15 இதழ் 226
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 1 — 10 — 1993

## பெருமளவு டாங்கிகள் தகர்த்து அழிப்பு

(கொழும்பு)

அல்லிப்பளை—புலோப்பளைப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மிகக் கடுமையான மோதலில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் பெருமளவு டாங்கிகள் தகர்த்து அழிக்கப்பட்டுள்ளன.

(4-ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர்க்கு குடாநாடு முழுவதும் மக்கள் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு இயக்கச்சிப் பகுதியிலிருந்து முன்னேற முயன்ற இராணுவத்தினரை இடைமறித்த பேராடி வீரச்சாவை அடைந்த மாவீரர்களுக்கு யாழ். குடாநாடு முழுவதும் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

(4 ம் பக்கம் பார்க்க)

# மூன்று நாள் போரில் ஆறு மேல் அதிகாரிகள் உட்பட 120 ராணுவத்தினர் உயிரிழப்பு

## 175 சிப்பாய்கள் காயம்

(யாழ்ப்பாணம்)

[...]த மூன்று நாட்களாக நடைபெற்று வரும் 'ஒபரேஷன் யாழ்தேவி'யில் ஆறு உயர் அதிகாரிகள் உட்பட 120 படையினர் பலியாகியுள்ளனர். 175 சிப்பாய்கள் காயமடைந்துள்ளனர்.

[ஆ]னையிறவு, இயக்கச்சிப் பகுதியிலிருந்து முன்னேற முயன்ற இராணுவத்தினரை நோக்கி விடுதலைப்புலிகள் நேற்றுமுன்தினம் முன்னேற்ற முயற்சிகள் இருவது நாளாக கடும் தாக்குதல் தொடுத்து வருவதாகவும் இத்தாக்குதலினால் படையினர் பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது. விடுதலைப்புலிகள் தரைசி[...]

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளிடமிருந்து கடும் தாக்கு

(கொழும்பு)

படையினர் எதிர்பார்த்ததையும்விட விடுதலைப்புலிகளிடமிருந்து கடுமையான எதிர்த்தாக்குதல்களை தாம் சமாளிக்க வேண்டியுள்ளதாக ராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எமது தாக்குதலுக்கு புலிகள் பின்வாங்கவில்லை. கடுமையான எதிர்த்தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(4-ஆம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சியில் நேற்றும் கடும் விமானத்தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியிலுள்ள கொடிகாமம், முகமாலை, பளை, மிருசுவில், எழுதுமட்டுவாள், சாவகச்சேரி, கெற்பெலி ஆகிய இடங்களில் நேற்று முழு நாளும் மூர்க்கத்தனமான விமான குண்டு வீச்சுத் தாக்குதலும் மற்றும் ஹெலிகொப்டர் தாக்குதல்களும் பரவலாக இடம்பெற்றன.

புக்காரா, மற்றும் சியாமா செட்டி, 'சுப்பசொனிக்' விமானங்கள் மாறி மாறி கடும் தாக்குதலை நடாத்தியுள்ளன.

(4-ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரியில் ஒருவர் பலி

யாழ்ப்பாணம்

சாவகச்சேரி சிவன் கோவில் சந்தியில் நேற்று மாலை 4-30 மணியளவில் நடைபெற்ற விமான தாக்குதலின் வீதியில் சென்று கொண்டிருந்த ஒருவர் உடல் சிதறிப் பலியானார். இத்தாக்குதலில் மேலும் 6 பேர் காயமடைந்தனர்.

இத்தாக்குதலினால் எரிபொருள் நிரப்பு நிலையம், சலவை நிலையம், வானொலி திருத்தும் கடை மற்றும் இரு கடைகள் பலத்த சேதமடைந்தன. வீடு ஒன்றும் சேதமடைந்தது.

இதேவேளையில் நேற்று பி.

(4-ம் பக்கம் பார்க்க)

## நுணாவிலில் 7 பேர் காயம்

(திருநெல்வேலி)

சாவகச்சேரி நுணாவில் பகுதியை நேற்றுமாலை வட்டமிட்ட இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் நுணாவில் வைரவர் கோவிலடியில் பொதுமக்கள் குடியிருப்புகள் மீது இரண்டு குண்டுகளை வீசின.

இக்குண்டு வீச்சினால் ஒருவீடு முற்றாக தரைமட்டமானதுடன் மரங்களும் முறிந்தன. இப்பகுதி ஒரே புகைமண்டலமாக காட்சியளித்தது.

ஒரு குழந்தை உட்பட ஏழு

(4-ம் பக்கம் பார்க்க)

## கல்முனையிலிருந்து ராணுவம் வாபஸ்

(யாழ்ப்பாணம்)

சங்குப்பிட்டிக்கு அருகிலுள்ள கல்முனை, மண்ணித்தலை ஆகிய இடங்களில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் அப்பகுதிகளிலிருந்து வாபஸ் பெற்று சங்குப்பிட்டிக்கு அருகிலுள்ள அரசடிப் பகுதியில் தமது நிலைகளைப் பலப்படுத்தி

(4ம் பக்கம் பார்க்க)

## ஹமில்டனின் உறவினரான உயர் அதிகாரியும் பலி

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவின் மருமகனான கப்டன் நளின் ஜெயதிலகாவும் நேற்றுமுன்தினம் ஆனையிறவு, இயக்கச்சி மோதலில் பலியாகியதாக கொழும்பில் இராணுவ பேச்சாளர் தெரிவித்தார்.

இவர் ஆனையிறவில் உயர் பதவியொன்றில் கடமையாற்றி இருக்கலாம் என செய்திகள் தெரிவிக்கின்றன.

(கே-ரி)

## கட்டம்கட்டமாக இராணுவ நடவடிக்கை

(கொழும்பு)

யாழ். குடாவில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கை கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்படும் என இராணுவ உயர் மட்டரார்கள் நேற்று தெரி

(4ம் பக்கம் தொடர்ச்சி)

## 80 விடுதலை புலிகள் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

கடந்த மூன்று நாள் இடம்பெற்ற போரில் விடுதலைப் புலிகள் தரப்பில் 80 போராளிகள் வீரச்சாவடைந்திருக்கக் கூடுமென கூறப்படுகின்றது.

இதேவேளையில் இயக்கச்சியிலிருந்து முன்னேற முயன்ற இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேற்று பெரிய அளவிலான மோதல்கள் எதுவும் இடம்பெறவில்லையென்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரி

(2-ம் பக்கம் பார்க்க)

## தொடர்ந்தும் ஊரடங்கு

(கொழும்பு)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் அமுலிலுள்ள ஊரடங்கு உத்தரவு தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்தது.

## இந்தியாவில் நிலநடுக்கம்; 10,000 பேர் பலி!

(புதுடில்லி)

இந்தியாவின் மஹாராஷ்டிரா மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று ஏற்பட்ட பயங்கரமான பூகம்பத்தில் பத்தாயிரத்துக்கும் அதிகமானோர் மரணமடைந்தனர். பதினோராயிரம்பேர்வரையில் காயமடைந்துள்ளனர். இதுவரையில் 2,200 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. கடந்த 60 ஆண்டு காலத்தில் பின் இந்தியாவில் இடம்பெற்ற மிகப் பயங்கர நில நடுக்கம் இதுவென தெரிவிக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்ட பகுதியில் மீட்புப் பணிக்கு உதவும் வகையில் இராணுவமும் ஈடுபட்டுள்ளது.

பம்பாயிலிருந்து 700 கிலோ மீட்டர் கிழக்கே அமைந்த லாத்தூர்

(4-ம் பக்கம் பார்க்க)

# தென்மராட்சி கிழக்கிலிருந்து ஐயாயிரம் பேர் இடம்பெயர்வு

## உதவிப் பணிகளுக்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

இயக்கச்சி, ஆனையிறவு இராணுவ முகாம்களிலிருந்து தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வரும் ஷெல் தாக்குதல்களினாலும், விமானங்களின் குண்டு வீச்சுக்களினாலும் பளை, கிளாலி, கெற்பெலி, தர்மக்கேணி, மறுக்காய், புதுக்காடு, இத்தாவில், பெரியபளை, தம்பகாமம், வேம்போடுகேணி, முகமாலை, எழுதுமட்டுவாள் பகுதிகளில் இருந்து ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்து வரணி, கச்சாய், கொடிகாமம், மிருசுவில், வடமராட்சி போன்ற பகுதிகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

கெற்பெலி பண்டிதர் குடியிருப்பிலிருந்து எழுநூறு குடும்பங்கள் தொடரும் தாக்குதல்களினால் இடம்பெயர்ந்துள்ளன.

இடம்பெயர்ந்தவர்களில் ஆயிரக்கணக்கான மக்களில் மிருசுவில் தேவாலயம் ஒன்றில் தஞ்சமடைந்தவர்களுக்கு வேண்டிய உதவிகளை கியூடெக் நிறுவனம் செய்துவருகிறது.

மேலும் பலர் வடமராட்சி கிழக்கிற்கும் இடம்பெயர்ந்து சென்றுள்ளதாகவும் இவர்களை பராமரிக்கும் பணியில் செஞ்சிலுவைச் சங்கம், தமிழர் புனர்வாழ்வுக்கழகம் உட்பட பல தொண்டர் நிறுவனங்கள் ஈடுபட்டுவருகின்றன.

ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதால் அவர்களுக்கான இருப்பிட வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும் நடவடிக்கையிலும் தொண்டர் நிறுவனங்கள் ஈடுபட்டுவருகின்றன. பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் இடம்பெயர்ந்தவர்களை தங்கவைப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தென்மராட்சிப் பகுதிக்கு இடம்பெயர்ந்துவரும் மக்களின் உடனடித் தேவைகளை கவனிக்கவென யாழ் செஞ்சிலுவைச் சங்கம், தமிழர் புனர்வாழ்வுக் கழகம், கியூடெக் நிறுவனம், அறவழிப் போராட்டக்குழு போன்ற அமைப்புகளை யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஏற்பாடு செய்துள்ளது.

சில இடங்களில் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களைக் களஞ்சியப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுருகிறது. (சு-ரி

---

## அமெ. தூதுவர் தமிழ் அகதிகளுக்கு ஆறுதல் கூறினர்

(கொழும்பு)

இலங்கையிலுள்ள அமெரிக்க தூதுவர் திரு. ஷெல்பிட்ட ஷபரிஸ் நேற்றுமுன்தினம் அம்பாறை மாவட்டத்திற்கு விஜயம் செய்து அங்குள்ள தமிழ் அகதிகளின் நிலைகுறித்து அகதிகளுடன் கலந்துரையாடினார். சம்மாந்துறை, வீரமுனை, காரைதீவு போன்ற பகுதிகளுக்கு விஜயம் மேற்கொண்ட அவர் தமிழ் அகதிகளுக்கு ஆறுதல் கூறியதுடன் நாட்டில் அமைதி திரும்பியவுடன் அமெரிக்க அரசாங்கம் இலங்கைக்கு கூடுதலான உதவிகளை வழங்குமெனவும் உறுதியளித்துள்ளார். -ஈஇ

---

## கால்நடைகளின் நோயை தடுக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கால்நடைகளுக்கு ஏற்படும் திடீர் நோயினால் தற்போது வவுனியா மாவட்டத்தில் கால்நடைகளின் இறப்பு அதிகரித்துக்கொண்டுவருவதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன விலங்கு வேளாண்மைப் பகுதியினர் விடுத்துள்ள செய்திக் குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது.

கால்நடைகளின் தொடைப் பகுதி திரட்சியாக விறைத்துக் காணப்படுவதுடன் வாயால் இரத்தம் கலந்த நுரை வெளியேற 24 மணித்தியாலங்களுக்குள்ளும் சில கால்நடைகள் வயிறுவீங்கி 2 அல்லது 3 மணித்தியாலங்களுக்குள்ளும் இறந்துவிடுவதும் இதன் அறிகுறிகளாகத் தென்படுகின்றன.

குறிப்பிட்ட நோய்களை இனங்காணும்பொருட்டு மிருகவைத்திய திணைக்கள அதிகாரிகள் நோய் தென்படும் இடங்களுக்குச் சென்று பார்வையிட்டு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் திணைக்களத்தை கோரியுள்ளது.

---

## தமிழீழ நீதிமன்றில்..

### காப்பு திருடியவருக்கு 800 ரூபா அபராதம்

(உடுவில்)

அம்பன், குடத்தனையில் உள்ள ராஜநகர் முகாமில் வசிக்கும் கட்டையன் சந்திரகுமார் என்பவர் அதே இடத்தைச் சேர்ந்த மாதன் சின்னுச்சி என்பவரின் 3100 ரூபா பெறுமதியுடைய காப்புக்களை களவாடியமைக்காக 800 ரூபா குற்றமாக அபராதம் விதிக்கப்பட்டது.

சங்கானை காவல்துறைப் பொறுப்பாளரால் சுன்னாகம் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்ட வழக்கு விசாரணையின்போது எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

நீதியாளர் க. தேவன் எதிரிக்கு 800 ரூபா அபராதம் விதித்து, அபராதப் பணம் செலுத்தத் தவறினால் எட்டு மாத கட்டாயசேவை புரிய வேண்டுமெனக் கூறித் தீர்ப்பளித்தார். (109)

---

## கடற்றொழிலாளருக்கு நிவாரணம் வழங்குக

(கொழும்புத்துறை)

ஸ்ரீலங்கா அரசாங்கம் அறிவித்துள்ள கடற் பிரதேசத் தடைச் சட்டத்தில் கடற்றொழிலாளர் குடும்பம் வருவாய் எதுவுமின்றிப் பட்டினிச் சாவை எதிர்நோக்கும் துர்ப்பாக்கிய நிலையிலிருந்து காப்பாற்ற உடன் ஆவன செய்து மீனவர் குடும்பங்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்குவதற்கு தங்களாலான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.''

இவ்வாறு கொழும்புத்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் செயலாளர் திரு. வி. திருநாவுக்கரசு யாழ் அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகருக்கு எழுதிய கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அக்கடிதத்தில் கடந்த நான்கு மாதங்களாக மீனவர்களுக்கு எதுவித நிவாரணமும் வழங்கப்படாததினால் மீனவர்கள் குடும்பங்கள் சொல்லொணாக் கஷ்டங்களில் வாடுகிறார்கள் என்றும் அவர்கள் குடும்பச் சிறார்கள் போஷாக்கின்மையால் வாடுகிறார்கள் என அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. [154]

---

### விளம்பரம்

#### "சுவடுகள்" நாவல் பதிப்புரையில்

இயல்வாணன் எழுதிய "சுவடுகள்" நாவலைப் படித்ததும் ஒரு புதிய பரம்பரை எழுத்தாளர் முளை விடுகிறார் என்று உறுதியுடன் தெரிவிக்க உச்சரித்துக்கொண்டேன். மீரா. (இ-488)

#### "சுவடுகள்"

இந்த நாவலில்...மௌனங்களைப் பிளந்து ஒரு வார்த்தை வெடிக்கிறது. இருளைக் கிழித்து ஒரு விடியல் பிறக்கிறது......சூரியனைத் தேடி ஒரு சுதந்திரப்பூ மலர்கிறது...... (இ-489)

#### பரபரப்பாகப் பேசப்பட்ட நாவல் "சுவடுகள்"

1991ஆம், 1992ஆம் ஆண்டுகளில் வெளிவந்த நாவல்களில் பரபரப்பாகப் பேசப்பட்ட நாவல் "சுவடுகள்" விற்பனையாகின்றது. பூபாலசிங்கம், ஸ்ரீகாந், கயிலன் புத்தகசாலைகள் - யாழ்ப்பாணம். (இ-490)

---

## கொடி வாரம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச நல்லொழுக்க தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்டுவரும் கொடி வாரம் நாளை 2-ம் திகதி வரை நடைபெறும். -162

## தெருக்கூத்து

(அரியாலை)

விடுதலைப்புலிகளின் கலை பண்பாட்டுக்கழக திலகப் பிரிவினரால் அண்மையில் புதைவிரதநிலை முன்பாக பேசக் காலத்தை சித்தரிக்கும் "போருக்குச் செல்வோம்" என்ற தெருக்கூத்து நடைபெற்றது. [59]

## விளையாட்டு போட்டி

(பருத்தித்துறை)

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நாகர் கோவிலில் நடாத்தும் ஐந்து பாலர் பாடசாலைகள் இணைந்து தியாகதீபம் திலீபன் ஞாபகார்த்தமாக விளையாட்டுப் போட்டியை நாகர்கோவில் கடற்கரை மைதானத்தில் நடாத்தின. நாகர்கோவில் அன்னை பூபதி பாலர் பாடசாலை, செந்தமிழ் பாலர் பாடசாலை, நலன் பாலர் பாடசாலை, ஜீவா பாலர் பாடசாலை, வெண்மதி பாலர் பாடசாலை ஆகியன இணைந்தே இத்திலீபன் ஞாபகார்த்த விளையாட்டுப் போட்டியை நடாத்தின. -52

## புனித. மிக்கேல் திருவிழா

(அரியாலை)

கரும்பிராய்-கிளாலி ஆகிய இடங்களிலுள்ள புனித மிக்கேல் ஆலய வருடாந்த திருவிழா கடந்த மாதம் 29-ம் திகதி புதன்கிழமை கொண்டாடப்பட்டது. [59]

## மூக்குக் கண்ணாடி அன்பளிப்பு [illegible]

(உடுவில்)

கண் பார்வை குறைந்தவர்களெனக் கண் வைத்தியரால் உறுதிப்படுத்தப்பட்டு மூக்குக் கண்ணாடி வாங்குவதற்கு வசதியில்லாதிருக்கும் இருபத்தைந்து பேருக்கு யாழ்ப்பாண லயன்ஸ் கழகத்தினரால் இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இவ்வைபவம் நடைபெற்றது. [108]

---


## அறிவுக் களஞ்சியம்

16-ஆவது இதழ் வெளிவந்துவிட்டது

தமிழீழத்தின் மிகச் சிறந்த

அறிவியல் ஏடு ரூபா 12/-

(ஏ-3463)



## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

யாழ்ப்பாணம்

## கொடி வாரம் — 1993

ஐப்பசி 03 தொடக்கம் 09 வரை நடைபெறவுள்ள மேற்படி கொடிவாரம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இது நடாத்தப்படவுள்ள திகதி மிக விரைவில் அறிவிக்கப்படும்.

கௌரவ செயலாளர்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(எ-3464)


---

## பரிசளிப்பு விழா

(பருத்தித்துறை)

தென் புலோலி கிழக்கு அடைமழை வழங்கு கூட்டுறவுச் சங்க முன் பைதலடி பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் நிலைய மைதானத்தில் திரு இரா. சுவந்திரம் தலைமையில் நடைபெற்றது. -52

## மாணவர் உணவு முத்திரை

(ஆனைப்பந்தி)

தீவகப் பாடசாலைகளின் மாணவர்களுக்குரிய ஏப்ரல், மே, ஜூலை மாதங்களுக்கான மதிய உணவு முத்திரைகள் தற்போது செயலகத்தில் இயங்கும் வேலணை ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளில் வழங்கப்படுகின்றன. -101-

## வரவேற்பு வைபவம்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் 1992/93ம் கல்வியாண்டைச் சேர்ந்த வெளிவாரி மாணவர்களுக்கான வரவேற்பு நிகழ்வு வைபவம் நாளை 2ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது. (154)

## மூன்று மாதம் சம்பளம் இல்லை

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தைச் சேர்ந்த சகல ஊழியர்களுக்கும் மூன்று மாதங்களாக எதுவித சம்பளக்கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை என இத்திணைக்கள ஊழியர்கள் தெரிவித்துள்ளார்கள் -157

## பொதுசன உதவிப் பணம்

(தாளையடி)

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களுக்கான ஜூலை மாதக் கொடுப்பனவு அவ்வப் பிரிவு கிராம சேவை அலுவலகங்கள் மூலம் வழங்கப்படுகின்றது. இதுவரை பணத்தைப் பெறாதவர்கள் கிராம சேவை அலுவலர்களிடம் பெற்றுக்கொள்ளலாம் என பிரதேச செயலர் அறிவித்துள்ளார். -163

## மாதாந்த கொடுப்பனவு

(ஆனைப்பந்தி)

தற்போது வழங்கப்படும் 1993 பெப்ரவரி தொடக்கம் ஆகஸ்ட் வரையான ஏழுமாத கால பொதுசன மாதாந்த உதவிப்பணக் கொடுப்பனவை இதுவரை பெறாத வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்டவர்களை உடனடியாக தமது கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளுமாறு வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவு அட்டவணைகள் தெரிவித்தன. -10

### விடுதலைப்

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

விக்கின்றன.

புலோப்பளையிலுள்ள அரசரணி என்ற இடத்தில் நிலைகொண்டிருந்த இராணுவம் நேற்று அதிகாலை அவ்விடத்திலிருந்து முன்னேற முனைந்த போது விடுதலைப்புலிகள் இராணுவத்தினர் மீது கடும் தாக்குதல் மேற்கொண்டதினால் இராணுவத்தினர் தமது முயற்சியைக் கைவிட்டு மீண்டும் முன்னர் நின்ற இடத்துக்கே திரும்பிவிட்டதாகவும் கூறப்படுகின்றது. -வீ

மணிவாசகம்

பொய் ஒற்றைக்காலில் நிற்கிறது. உண்மைக்கு கால்கள் இரண்டு.

— பெஞ்சமின் பிராங்களின்

# வடபகுதி இராணுவத்தினரின் அனைத்து லீவுகளும் ரத்து

## படை உஷார் நிலையில்

(கொழும்பு)

வடபகுதியிலுள்ள ராணுவ முகாம்களில் கடமையாற்றும் படையினரின் அனைத்து விடுமுறைகளும் ரத்துச்செய்யப்பட்டு படைநிலைகள் அனைத்தும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக கொழும்பு பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

பாரிய திடீர் தாக்குதல்களை விடுதலைப்புலிகள் இம்முகாம்களின் மீது நடத்தலாம் என்பதனாலே படைநிலைகள் அனைத்தும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல் நடைபெறும் பட்சத்தில் எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தாக்குதல்களை முறியடிப்பதற்குமாக படையினர் லீவுகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை இயக்கச்சி ஆனையிறவுப் பகுதியில் சண்டையில் ஈடுபடும் படையினருக்கு உதவியாக மேலதிக படையினர் பலாலி முகாமிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அத்துடன் இம்மோதலில் காயமடையும் படையினரையும் இறக்கும் படையினரின் சடலங்களையும் உடனுக்குடன் பலாலிக்கு கொண்டு செல்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனவாம். (ரி)

# நமது நோக்கு

## பதட்டமா? வேண்டாமே!

போர் நெருக்கடி காலங்களில் மக்கள் திடீரெனக் கிடைக்கும் செய்திகளைக் கேட்டுப் பதட்டமடைகிறார்கள்.

தபால் தந்தித் திணைக்களம் பூரணமாகச் செயற்படுவதில்லை. தந்திச்சேவை இல்லாக்குறையை 'வதந்திச் சேவை' நிறைவு செய்கின்றது.

குண்டு வீச்சு விமானங்களின் பேரிரைச்சலால் பதட்டமடையும் மக்கள், அரைகுறையாக அறியும் செய்திகளைக் கேட்டு மேலும் பதட்டம் அடைகிறார்கள்!

கேட்பதைப் பிறருக்குச் சொல்லும்போது கற்பனையும் கலந்துவிடும்.

சிலர், நாளாந்தக் கடமைகளையே மறந்துவிட்டு, "இப்படியும் நடக்கும்! இதுதான் நடக்கும்!" என்று கற்பனைக் காட்சிகளைக் கண்டு கொண்டிருப்பர்.

அவற்றைப் பிறருக்குக் கூறி மன ஆறுதல் பெறுவர்; ஆனால் அவர்கள் செய்வது என்ன?

பதட்டம், பயம், மன நெருக்கடி போன்ற 'நோய்க் கிருமிகளை' பரப்பிவிடும் தொண்டே புரிகின்றனர்.

இதேவேளை, பதட்டத்தால் பயனடைவோர் பற்றியும் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்

பதட்டமடைந்த மக்கள், சில பொருட்களை வாங்கிச் சேமித்துவிட வேண்டும் என்று பரபரப்படைவார்கள்.

இவர்களின் பரபரப்பைக் கண்ட சிலவகை வியாபாரப் பெருச்சாளிகளும், பதட்டமடைந்து, ஒதுக்கிடம் தேடி, ஓடி ஒளிந்து கொள்ளவும். பின்னர் கூடிய விலையில் மெல்ல, மெல்லத் தலை நீட்டும்!

இதைவிட, அரச பயங்கரவாதத்தின் ஒரு அம்சமே பதட்டத்தை உருவாக்குவதாகும். மக்களின் மனோதிடத்தை உடைத்தெறியப் பல காரியங்களை, அரசு பக்குவமாகச் செய்யும்.

வானொலி போன்ற பிரசார சாதனங்கள் மூலம் திரித்துக் கூறும் செய்திகளால் குழம்பியிருக்கும் மக்கள் மேலும் குழப்பம் அடைவார்கள்.

போர் நடவடிக்கைகள் எமது நாட்டில் மாத்திரம் நடைபெறவில்லை. போரின் கொடுமைகளைப் பல நாட்டு மக்கள் அனுபவித்துள்ளார்கள்; அனுபவித்து வருகிறார்கள்!

ஆனால், பதட்டமடையாது நிமிர்ந்து நின்றோர், பல சாதனைகள் புரிந்துள்ளார்கள் என்பதே வரலாறு!

## வரிட்சார்த்த கரி உற்பத்தி முல்லையில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டிலே ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக கூழாமுறிப்பிலுள்ள ஓட்டுத் தொழிற்சாலையில் மரக்கரியினை உற்பத்திசெய்து அனுப்புவதற்கான முயற்சியினை முல்லை மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கைத்தொழில் பகுதியினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்காக 80 தூக்கு அளவிலான விறகு எரித்து கரி தயாரிக்கப்பட்டுள்ளது. இதனை பொதி செய்து குடாநாட்டிற்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நடைமுறை சாத்தியமாக அமையும் பட்சத்தில் இவ்உற்பத்தியினை தொடர்ந்து மேற்கொள்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. (ரி)

## சங்கீத, நடன ஆசிரியர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரிக் கோட்டத்தில் கடமையாற்றும் சகல சங்கீத-நடன ஆசிரியர்களை இன்று 1ம் திகதி வெள்ளிக்கிழமை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும் மேற்படி ஆசிரியர்களுக்கான கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. வே. வீரபத்திரன் பணித்துள்ளார். (ரி)

## தென்னங்கன்று விநியோகம்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாண மாவட்டத்தில் தென்னை உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக நல்ல இனத் தென்னங்கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன

நல்லூர், தொல்புரம், சாவகச்சேரி ஆகிய கமநலசேவை நிலையங்களில் நல்ல இனத் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டு வருகிறது. (154)

# விமானத் தாக்குதலுக்கு இந்துபேரவை கண்டனம்

(யாழ்ப்பாணம்)

அப்பாவிப் பொதுமக்களையும், ஆலயத்தில் சரணடைந்தவர்களையும் பலி கொண்ட ஸ்ரீலங்கா விமானப்படையின் கடந்த 28ம் திகதி யாழ். குடாநாட்டுத் தாக்குதல் குறித்து எமது ஆழ்ந்த கவலையையும் கண்டனத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம் என்று இந்துசமயப் பேரவை தெரிவித்துள்ளது.

இந்துக்களின் வழிபாட்டுத் தலங்களையும் அப்பாவிப் பொதுமக்களையும் விமானக் குண்டுகளால் தாக்குவதன் மூலம் இலங்கையரசு தனது கையாலாகாத் தனத்தையும், மனிதாபிமானமற்ற போக்கையும் பகிரங்கப்படுத்திவருகின்றது. புத்தபகவானின் வாரிசுகளான இலங்கைப்பௌத்தர்களையும் மனிதாபிமானமுள்ள இலங்கைப்பிரஜைகளையும் அரசின் இந்தப் போக்கைக் கண்டிக்குமாறும் நாட்டைப் பாதிக்கும் இனப்பிரச்சினையை இராணுவ நடவடிக்கைகளைக் கைவிட்டு பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதற்கு நிர்ப்பந்திக்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவை சமீபத்திய ஸ்ரீலங்கா விமானப்படையால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் குறித்து வெளியிட்ட கண்டன அறிக்கையிலே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி)

## இன்று

(நெல்லியடி)

நெல்லியடி தரிசனம் ஆதரவில் கரவெட்டி பிரதேச செயலகம் நடாத்தும் சாதனை விருது வழங்கும் வைபவம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (160,52)

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். கட்டப்பிரசய் சரஸ்வதி சனசமூகநிலைய பாலர் பாடசாலை திறப்புவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை சரஸ்வதி சனசமூகநிலைய மண்டபத்தில் திரு. இ. ஸ்ரீபதி தலைமையில் நடைபெறும்.

பிரதமவிருந்தினராக உள்ளூர் ஆட்சி உதவிஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலாவும் சிறப்பு விருந்தினர்களாக தமிழீழ கல்விப் பொறுப்பாளர் திரு. வே. இளங்குமரன் யாழ். மாவட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. வி. வேலாயுதமும் கலந்துகொள்வார்கள். (162)

0 0 0

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கருக்கெழுத்துக்கழக 8வது ஆண்டு நிறைவு தின நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பி. ப. 2-00 மணிக்கு வதிரி கரவெட்டி பிரதான செயலகத்தில் நடைபெறவுள்ளது.

## ஒபரேஷன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முனையில் இராணுவத்தினர் எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்வதற்கு அவர்களுக்குத் தேவையான அதிகாரங்களை அரசு வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் அடுத்த தாக்குதல்களை இராணுவத்தினர் சந்திக்க வேண்டியுள்ளதாகவும் இதனால் ராணுவத்தினரின் தாக்குதல்களில் மாற்றங்கள் ஏற்படலாம் எனவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த ஒரு வருடகாலத்துக்குள் இராணுவம் மேற்கொண்ட தாக்குதல்களில் 'ஒபரேஷன் யாழ் தேவி' மிகப் பெரிய தாக்குதலென இராணுவ அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பகுதியில் அகோர விமானத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் குடியிருப்புப் பகுதிகளை நோக்கியே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்படுவதாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன —இ

# மட்டு. மாவட்ட வனவளங்கள் வன்செயல்களினால் அழிவு

(மட்டுநகர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வனவளங்களின் பெரும்பகுதி கடந்த இரு தசாப்தங்களில் பெருமளவில் அழிக்கப்பட்டிருப்பதாக வனபரிபாலன திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் 1982ம் ஆண்டு 70ஆயிரத்து 145ஹெக்டேயரில் வனவளம் காணப்பட்டது. அடர்ந்த காடுகள் 30 310 ஹெக்டேயரிலும், திறந்த காடுகள் 31,535 ஹெக்டேயரிலும், சதுப்புநிலக்காடுகள் 1390 ஹெக்டேயரிலும், நடுத்தரக் காடுகள் 6910 ஹெக்டேயரிலும் காணப்பட்டன.

தற்போது அடர்ந்த காடுகளில் 6910 ஹெக்டேயரும், திறந்த காடுகள் 11 ஆயிரத்து 15 ஹெக்டேயரும் அழிக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

வன்செயல்கள் காரணமாக வனவளர்ப்பு முகாமையிலும், வனவள முகாமையிலும் ஏற்பட்ட நெருக்கடிகள் காரணமாகவே வனவளம் அழிந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால் சூழல் மாசுபடுவதால் தேவைகளுக்கு வெளி மாவட்டங்களை நாட வேண்டிய நிலை தோன்றியுள்ளது. (71-வி)

நீர் இன்றேல் சீர் இல்லை

## ஓய்வூதிய வவுச்சர்கள்

(மானிப்பாய்)

ருகுணு கப்பல் மூலம் யாழ். செயலகத்திற்கு வந்து சேர்ந்த இறைவரித் திணைக்கள ஊழியர்களினதும், உள்ளூராட்சி திணைக்கள ஊழியர்களினதும் செப்டம்பர் மாதத்திற்குரிய ஓய்வூதியப் பற்றுச் சீட்டுகளும் காசோலைகளும் அந்தந்த வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (71-வி)

பஸ் மீது

## தீக்குண்டு வீச்சு; எண்மர் காயம்

(சென்னை)

தர்மபுரி மாவட்டத்தில் பயணிகள் பஸ் ஒன்றின்மீது நேற்று முன்தினம் இரவு தீக்குண்டுகள் வீசப்பட்டன. இச்சம்பவத்தில் ஒரு பொலிஸ் உட்பட எட்டுப் பயணிகள் தீக்காயங்களுக்குள்ளானார்கள்.

காயமடைந்தவர்கள் அனைவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். -ரி

பாடசாலை

## பெயர் மாற்ற கோரிக்கை

(அச்சுவேலி)

அச்சுவேலி மகாவித்தியாலயத்தின் பெயரை "அச்சுவேலி மத்திய கல்லூரி" எனப் பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என பாடசாலை அபிவிருத்திச் சபையின் பொதுக் கூட்டத்தில் ஒருமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. -74

## கராட்டிப் போட்டி ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விளையாட்டுக் குழுவினரால் இம்மாதம் 2ம், 3ம் திகதிகளில் நடாத்தப்படவிருந்த 'கராட்டிப் போட்டி' பிற்போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

மேற்படி போட்டிக்கான இடம், காலம் என்பன பற்றி பின்னர் அறிவிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## இராசிபலன்

01-10-1993

வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு புரட்டாதி 15)

பிரதமை பி. இ. 2-49 வரை, ரேவதி நாள் முழுவதும், சித்தாமிர்தயோகம், இராகுகாலம் காலை 10-32 முதல் 12-02 வரை, சுப நேரம் காலை 6-02 முதல் 7-32 வரை.

மேடம்: தொழில் கஷ்டம், மனச்சங்கடம், அலைச்சல்.

இடபம்: இனிய வாய்ப்பு, கடன் வரவு, சகோதர உதவி.

மிதுனம்: மனைவி பெருமை, சுபகாரியம், மனமகிழ்ச்சி.

கடகம்: தகாத உறவு, பணமுடை, தப்பபிப்பிராயம்.

சிம்மம்: கண்வலி, பெற்றோர் துயர், தொழில் கஷ்டம்.

கன்னி: வசதி வாய்ப்பு, குடும்பச் சிறப்பு பயணம்.

துலாம்: வெளியார் உதவி, காரிய சித்தி, மனமாற்றம்.

விருச்சிகம்: கௌரவக் குறைவு, வீண் யோசனை, வேதனை.

தனுசு: தொழில் பதற்றம், தாயார் உபதேசம், கடன் படல்.

மகரம்: மாமனார் உதவி, தொழில் லாபம், வாக்கு வன்மை.

கும்பம்: வருவாய் பாதிப்பு, உடல் நலம், பழைய நினைவுகள்.

மீனம்: தொழில் முதலீடு, இனிய சம்பாஷணை, திருமண யோகம்.

— ஜோஸ்யர்.

# வடமராட்சி கடலில் பாரிய பீரங்கி கப்பல்கள்

(பளை)

வெற்றிலைக்கேணி இராணுவ முகாமிற்கு அண்மையில் வடமராட்சிக் கடற்பரப்பில் ஐந்து பாரிய பீரங்கிக் கப்பல்கள் தரித்து நிற்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

படையினருக்கு உதவியாக தாக்குதலை நடாத்தவும், இராணுவத் தளபாடங்களை தரையிறக்கவும் இவை பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

இதேவேளை வடமராட்சிக் கடலிலிருந்து நேற்று அதிகாலை பீரங்கிப் படகுகள் தாக்குதல்களை நடத்தியுள்ளன. சேத விபரங்கள் குறித்த தகவல் ஏதும் கிடைக்கவில்லை. —156-கி-இ

# பளையில் ஹெலிதாக்கு இருவர் காயம்

(திருநெல்வேலி)

பளை பகுதியில் நேற்று நண்பகல் ஒரு மணி முதல் ஹெலிகொப்டர் வட்டமிட்டு வீதியால் சென்றவர்கள் மீதும் வாகனங்கள் மீதும் கண்மூடித்தனமாக வேட்டுக்களை தீர்த்தது.

இத்தாக்குதலில் வீதியால் சென்று கொண்டிருந்த இருவர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் சகோதரர்களாவார்கள்.

மாயரஞ்சன் (22வயது) திருவேல் (24 வயது) ஆகிய இருவருமே காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். —157-இ

# ஆனையிறவை தாக்க புலிகள் திட்டம்

(கொழும்பு)

ஆனையிறவு, பூநகரி ஆகிய இராணுவ முகாம்களைத் தாக்குவதற்கு விடுதலைப் புலிகள் திட்டமிட்டிருந்ததாக பாதுகாப்புவட்டாரங்கள் நேற்று தெரிவித்தன.

இத்தகைய தாக்குதலை எதிர்கொள்ளக் கூடியவகையில் படையினர் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்ததாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. —க-இ

## நள்ளிரவு ஹெலிதாக்கு

(பளை)

நேற்று முன்தினம் இரவு 12-45 மணியளவில் வரணி சந்தைப் பகுதியில் தொடர்ச்சியான ஹெலிதாக்குதல் நடத்தப்பட்டது. இத்தாக்குதலினால் இரண்டு கடைகள் சேதமடைந்தன.

ஆழ்ந்த நித்திரையில் இருந்த மக்கள் அகப்பட்ட பொருட்களுடன் பாதுகாப்பான இடங்களை நோக்கி ஓடினர்.

இத்தாக்குதலினால் மூன்று வீடுகள் சேதமடைந்ததுடன் ஒரு வாகனமும் சேதமடைந்தது. - 156-இ

# செஞ்சிலுவை அம்புலன்சை புக்காரா துரத்தியது

(யாழ்ப்பாணம்)

விமானத் தாக்குதலினால் காயமடைந்த பொதுமக்களை மீட்பதற்காக பளை, கொடிகாமம் பகுதிக்குச் சென்ற இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் அம்புலன்ஸ் வாகனம் விமானத் தாக்குதலில் இருந்து மயிரிழையில் தப்பியது.

காயமடைந்த பொதுமக்களை ஏற்றிக்கொண்டு யாழ். போதனா வைத்தியசாலையை நோக்கி வந்த யாழ்ப்பாணக் கிளை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் அம்புலன்ஸ் வாகனத்தை குறிவைத்து பின் தொடர்ந்துவந்த ஒரு புக்காரா விமானம் சாவகச்சேரியில் வைத்து ரொக்கட் தாக்குதலை மேற்கொண்டது.

பின்தொடர்ந்து வந்த விமானத்துக்கு தமது வாகனம் ஒரு அம்புலன்ஸ் வண்டி என்பதை விமானிக்கு தெரிவிக்கும் முகமாக சமிக்ஞை விளக்குகள் மூலம் தெரிவித்த போதிலும் இவ்வண்டியை நோக்கி ரொக்கட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

எனினும் வாகனமும், வாகனத்திலிருந்த அனைவரும் தெய்வாதீனமாக தப்பிக் கொண்டதாகக் கூறப்படுகின்றது. —வி-இ

## புதிய கல்வி அலுவலகங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பதினான்கு புதிய கோட்டக் கல்வி அலுவலகங்களும் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் ஆரம்பமாகவுள்ளன. மேற்படி பதினான்கு அலுவலகங்களுக்கும் பொறுப்பாக இலங்கை கல்வி நிர்வாக சேவை அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தமது செயலகங்களிலுள்ள செயற்பாடுகளை இன்றுமுதல் செயற்படுத்த வேண்டுமென மாவட்ட கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். —இ

# பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணலாம்

## - ஆயர் கென்னத் பெர்னாண்டோ

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு சமரச பேச்சுவார்த்தை மூலமே தீர்வுகாண முடியுமென கொழும்பு மறை மாவட்ட பேராயர் அதி. கென்னத் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

சமரசப் பேச்சுவார்த்தையே சமாதானத்தை நிலைநாட்ட உதவும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். - க-இ

# 40 பொதுமக்கள் இதுவரை பலி

(கொழும்பு)

கடந்த மூன்று நாட்களாக வடபகுதியில் இடம்பெற்று வரும் இராணுவ நடவடிக்கைகளில் நாற்பது பொதுமக்கள் வரை உயிரிழந்ததாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

சாவகச்சேரி, கொக்குவில் பகுதிகளில் இவர்கள் பலியானதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆனையிறவுப் பகுதியில் கடும் சமர் நடைபெற்று வருவதாக படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. —இ

கட்டம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்பட்டுள்ளன.

தாக்குதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் இடங்களிலிருந்து பொதுமக்கள் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் எனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (க-இ)

சாவகச்சேரியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பகல் 2 மணியளவில் முகமாலை பகுதியில் நடாத்திய விமானக் குண்டுத்தாக்குதலில் இருவர் காயமடைந்தனர். -162-க-இ

# இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

கடந்த மூன்று நாட்களாக யாழ் குடாநாட்டில் நடைபெற்றுவந்த இராணுவ நடவடிக்கை காரணமாக தமது குடிமனைகளைவிட்டு இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்துள்ள மக்களுக்கு உடன் நிவாரணம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் அவ்வப்பகுதி உதவி அரசாங்க அதிபர்கள் ஊடாக செயற்படுத்தப்படுமென யாழ் அரசாங்க அதிபர் திரு கே. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு தொடர்ந்து நிவாரணம் வழங்குவது பற்றி ஆலோசிக்கப்படுவதாகவும் தெரிவித்தார். (161-162-இ)

தென்மராட்சி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தாக்குதலினால் வீடுகள், கோவில், பாடசாலைகள் என்பன பலத்த சேதம் அடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் கெற்பெலி பகுதியில் இலக்கச்சி இராணுவ முகாமிலிருந்து பலத்த ஷெல் தாக்குதலும் நடத்தப்பட்டுள்ளன. —க-இ

பெருமளவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தகவலை கொழும்பில் நேற்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்ததாக 'வொய்ஸ் ஒப் அமெரிக்கா' தெரிவித்தது.

பல டாங்கிகளை புலிகள் தம்வசப்படுத்தியபின் அழித்ததாகவும் டாங்கிப் படைகள் முன்னணியில் சென்றபோதே புலிகள் நவீனரக ஆயுதங்களைக்கொண்டு பல டாங்கிகள் தகர்த்ததாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்ததாகவும் 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' தெரிவித்தது. —சி-இ

நுணாவிலில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பேர் காயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ச. தயாளினி (வயது 19), ரஞ்சினிதேவி (வயது 17), ஜெயநாதன் (வயது 18), சிவபாக்கியம் (வயது 42), ஆ. சுசந்தசோபிதா (19 வயது), க. நாகம்மா (வயது 60) ஆகியோர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஒரு சிறுமியும் காலில் காயமடைந்து அனுமதிக்கப்பட்டுள்ளார். (157)

புலிகளிடமிருந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து படையினர் கடும் நெருக்கட் தாக்குதலை மேற்கொள்ளவேண்டியுள்ளது.

இதேவேளை இத்தாக்குதலில் இராணுவத்தினருக்கு மேலும் இழப்புகள் ஏற்படலாமென இராணுவதரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. —இ

மூன்றுநாள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்ணி வெடிகள் மற்றும் மோட்டார் குண்டு தாக்குதல் நடாத்தி வருவதாகவும் இதனால் படையினரின் கவச வாகனங்கள் தாக்கப்பட்டு வருவதாகவும் படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ் ஆண்டில் படையினர் சந்தித்த மிகப்பெரிய இழப்பு இதுவென தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலில் ஸ்ரீலங்காப் படையிடமிருந்து கனரக இராணுவ உபகரணங்களையும் மற்றும் இராணுவ தளபாடங்கள் பலவற்றையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றியுள்ளன. —க

மாவீரருக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வீதிகள் எங்கும் தோரணங்களும், கறுப்புக் கொடிகளும் கட்டப்பட்டிருந்ததுடன் சோக கீதங்கள் ஆங்காங்கே ஒலித்துக் கொண்டிருந்தன.

மேற்படி சமரில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் வித்துடல்கள் நேற்று பிற்பகல் வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி ஆகிய மூன்று கோட்டங்களில் வீரவணக்கக் கூட்டங்கள் நடைபெற்று மாவீரர் துயிலும் இல்லங்களில் விதைக்கப்பட்டன. — 109-வி

கல்முனை

1-ம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ளதாக அறிய வருகிறது.

இராணுவம் வாபஸ்பெற்றதையடுத்து கல்முனை, மண்ணித்தலை பகுதிகளில் மீனவர்கள் தாம் முன்னர் கைவிட்டு வந்த மீன்பிடி சாதனங்களையும் சேதமடைந்த பல வள்ளங்களையும் அங்கிருந்து மீட்டுள்ளார்கள்.

மேற்படி பகுதிகளுக்கு நேற்றுமுன்தினம் நூற்றுக்கு மேற்பட்ட மீன்பிடி வள்ளங்கள் சென்று மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டு வருவதினால் மீன் விலைகள் பெருமளவு வீழ்ச்சியடைந்துள்ளன.

நேற்றுமுன்தினம் அதிகாலை கல்முனைக்கு அப்பால் கடலில் நிலைகொண்டிருந்த பாரிய கடற்படை கப்பல் ஒன்று கல்முனை மண்ணித்தலை பகுதிகளை நோக்கி கடும் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டதாகவும் இதனால் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த பல மீனவர்கள் அப்பகுதிகளைவிட்டு உடனடியாக பாஷையூர், குருநகர் பகுதிகளுக்கு திரும்பிவந்துவிட்டதாகவும் மீனவர் தெரிவித்தனர். (வி-கி)

இந்தியாவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டத்தில் அமைந்த கிலாறி கிராமமே மிக மோசமாக பாதிக்கப்பட்டது.

இப் பகுதியிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் 200 க்கு மேற்பட்ட வீடுகள் தரைமட்டமாகின.

நேற்று காலை 4 மணிக்கு முதலாவது நில நடுக்கம் ஏற்பட்டு பின்பு காலை 6-30 மணிக்கு அடுத்தநில நடுக்கமும் ஏற்பட்டது.

கர்நாடகம், ஆந்திர பிரதேசம், குஜராத் மாநிலங்களின் சில பகுதிகளிலும் கூட இந்த நிலநடுக்கம் லேசாக ஏற்பட்டது.

தமிழ்நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் லேசான நிலநடுக்கம் ஏற்பட்டதாக மக்கள் தெரிவித்தனர். இப்பகுதிகளில் வீடுகள், கட்டிடங்களில் பல வெடிப்புக்கள் ஏற்பட்ட போதும் உயிர்ச்சேதம் ஏற்பட்டதாக அறியவரவில்லை.

நேற்றுக்காலை நேரிட்ட இந்த நிலநடுக்கம் மராட்டா பிராந்தியத்தில் சென்ற மாதம் 24ம் திகதிக்குப்பின் ஏற்பட்ட நான்காவது நிலநடுக்கமாகும்.

1934ம் ஆண்டில் இந்தியாவில் ஏற்பட்ட மிகப்பயங்கரமான நிலநடுக்கத்தில் 10,700 க்கும் மேற்பட்டோர் பலியானது குறிப்பிடத்தக்கது.

வாந்திபேதி:

## நேற்று ஒருவர் மரணம்

(திருநெல்வேலி)

வாந்திபேதி நோயினால் பீடிக்கப்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நோயாளி ஒருவர் மரணமானார்.

மரணமானவர் அராலி வடக்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த மு. நாகரத்தினம் (வயது 54) ஆவார்.

பிரதமர் நரசிம்மராவ் இச் சம்பவத்தை கேள்வியுற்றதும் தனது அதிர்ச்சியையும் கவலையையும் வெளியிட்டுள்ளார்.

இந்த நில நடுக்கத்தில் 30க்கும் அதிகமான கிராமங்கள் நிலத்தில் புதைந்துவிட்டன. ஆழ்ந்த நித்திரையிலிருந்த மூவாயிரத்துக்கும் அதிகமானோர் உயிருடன் நிலத்துள் புதையுண்டு போயுள்ளனர்.

ரஷ்யா, பிரிட்டன், [illegible] நாடுகளிலிருந்து [illegible] குழுக்கள் இந்தியா வந்துள்ளன. இதேநேரம் ஐ.நா. சபை மீட்புக்குழுக்களை அனுப்புவதற்கு முன்வந்துள்ளது. —வீ-கே-க

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10 336/B: